சொல்லுகிறார்கள். செங்கொடியையோ அல்லது வேறு எந்தக் கொடியையோ ஏந்திக்கொண்டு டெமான்ஸ்ட்ரேஷன் செய்யட்டும் அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. கலெக்டர் ஆபீஸ் முன் மறியல் செய்வதன் அர்த்தம் என்ன ? மறியல் எதற்காக செய்வது. இதற்கு மறியல் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. இந்தச் சட்ட மன்றம் இந்த மசோதாவைப் பற்றி விவாதித்துக்கொண்டிருக்கும்போது இந்தச் சட்ட சபையின் முன்பே மறியல் செய்ய வேண்டியதன் அர்த்தம் என்ன ? நேற்று நான் வந்துகொண்டிருந்தபோதுகூட என்னை சட்டசபைக்கு விடாமல் குறுக்கே நின்று மறித்தார்கள். அதைப்போலவே சட்டசபை அங்கத்தினர்கள் சட்ட சபைக்கு வரும்போதுகூட இப்படி தடுத்திருக்கிறார்கள். அப்படி தடுக்கும்போது போலீஸ்காரர்கள் அவர்களை பிடித்து இழுத்திருக்கிறார்கள். அதற்கு போலீசாரின் பலாத்காரம் என்று அர்த்தமா ? என்னையும் கனம் அங்கத்தினர்களையும் இங்கே வரக்கூடாது என்று சொல்வதில் என்ன அர்த்தம்- இதையெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சி தலைவரே முன்னின்று செய்யச் சொல்லுகிறார். இதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் ஆதரவின் பேரில் இப்படி நடக்கிறது. கலெக்டர் ஆபீஸ் முன் மறியல் செய்யும்போதும் இங்கே கனம் அங்கத்தினர்கள் உள்ளே வரும்போதும் தடுத்தால், உள்ளே விடாமல் மறியல் செய்தால் அவர்களை என்ன செய்வது. போலீஸ்காரர்கள் அவர்களைத் தடுக்கிறார்கள். அதற்கு துன்புறுத்துகிறார்கள் என்று அர்த்தமா ? அதிகாரத்தை மீறி ஏதாவது நடந்தால் அதைப்பற்றி புகார் வந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே இந்தப் பிரச்னைக்கு அவசியம் இல்லை. இது வேண்டுமென்றே நடக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த மன்றத்தின் உரிமையை எப்பொழுதும் கண்காணிப்பதாகச் சொல்கிற கம்யூனிஸ்டு கட்சித் தலைவரே இம் மன்றத்தின் உரிமை பாதிக்கக்கூடிய வகையில் நடந்துகொள்கிறார்.

DEPUTY SPEAKER : After hearing the Hon. Home Minister I have come to the conclusion that the matter does not involve more than the ordinary administration of law and order. So I rule the motion out of order.

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS FOREST AMENDMENT BILL, 1961.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move :

" That leave be granted to introduce the Madras Forest (Amendment) Bill, 1961."

DEPUTY SPEAKER : The question is—

" That leave be granted to introduce the Madras Forest (Amendment) Bill, 1961 ".

The motion was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960) AS AMENDED BY THE JOINT SELECT COMMITTEE—*cont.*

Clause 10—cont.

SRI R. SRINIVASA IYER : Yesterday I was talking about clause 10. This clause 10 relates to preparation and publication of draft statement as regards land in excess of the ceiling area.